# பனிமயம்

**ஜூன் 2024**

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

பணி நிறைவுச்
சிறப்பிதழ்





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

இந்த மாத இதழுக்கு "பணி நிறைவுச் சிறப்பிதழ்" என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆம், இந்த இதழோடு பனிமயம் இதழின் ஆசிரியர், பதிப்பாளர் என்னும் இனிய பணியை நான் நிறைவு செய்கிறேன். மேலும், பனிமய அன்னைப் பேராலயத்தின் அதிபர், பங்குத் தந்தை என்னும் பணிகளையும் நான் நிறைவு செய்கின்றேன். இது ஜூன் மாத இதழானாலும், இதனை நான் எழுதும் இந்நாளில் (10.05.2024) என் பணி இன்னும் நிறைவடையவில்லை. இறைவனின் பேரிரக்கத்தால், எதிர்வரும் **20.05.2024** அன்று இப்பேராலயத்தின் புதிய அதிபர், பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்கவிருக்கும் அருள்பணி. **ஸ்டார்வின்** அவர்களை உங்கள் அனைவரின் சார்பாக அன்புடன் வரவேற்கிறேன். அடுத்த இதழிலிருந்து அவர்களே இவ்விதழின் ஆசிரியர், பதிப்பாளராக உங்களைச் சந்திப்பார்கள்.

கடந்த ஐந்து (2019-2024) ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கும்போது, "ஆண்டவரே, உம் **வியத்தகு செயல்களால் என்னை மகிழ்வித்தீர்**; உம் வலிமைமிகு செயல்களைக் குறித்து நான் மகிழ்ந்து பாடுவேன்" (திபா 92:4) என்னும் திருப்பாடல் வரிகளே என் மனதில் எழுகின்றன.

இயேசு தம்முடைய பணிகளை நிறைவுசெய்தபோது, "நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் **செய்து முடித்து** நான் **உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன்**" (யோவா 17:4) என்று தந்தை இறைவனைப் பெருமைப்படுத்தினார். நானும் தமது பேரிரக்கத்தினால், என்னை இந்தத் திருத்தலத்துக்கு அழைத்து வந்த ஆண்டவருக்கு எல்லாப் புகழையும், மாட்சியையும் செலுத்துகிறேன்.

ஐந்து ஆண்டுகளாக என் அடைக்கல அன்னையாக இருந்து, என்னைப் பாதுகாத்து, வழிநடத்தி, ஆசீர்வதித்த பனிமயத் தாய்க்கு நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்தப் பணிகளை ஆற்ற என்னோடு உடன் உழைத்த, ஊக்குவித்து. செபித்த அனைவருக்கும் நன்றி செலுத்தி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 25 தாரகை 10

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
புனித பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
புனித பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**தங்கள் வீடுகளை விட்டுப் புலம்பெயர்ந்தவர்களுக்காக...**

போர் அல்லது பசியினால் வெளியேறி, ஆபத்தும் வன்முறையும் நிறைந்த பயணங்களுக்குத் தள்ளப்படும் புலம்பெயர்ந்தோர், தாங்கள் சென்றடையும் நாடுகளில் வரவேற்பும் புதிய வாய்ப்புகளும் பெற நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

## பணி நிறைவுச் சிறப்பிதழ்

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இறைவனின் திருச்சமூகம் . . . . . . . . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கில் மரபுகளும் மாற்றங்களும் . . . . . . . . . . . . 8
அருள்பணி. குமார்ராஜா

4. ஐந்து ஆண்டுப் பணிகளின் தாக்கம்! . . . . . . . 10

5. பனிமய சாட்சியங்கள் . . . . . . . . . . . . . . . . . 11

6. ஐந்தாண்டுகளில் என்ன மாற்றங்கள் நிகழ்ந்தன? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 12

7. கடந்த ஐந்து ஆண்டுகளில் பேராலயப் பங்கின் சில தனித்துவ நிகழ்வுகள் . . . . . 15

8. பாதுகாத்த பனிமயத் தாய் . . . . . . . . . . . . . . 17
அருள்பணி. குமார்ராஜா

9. இதயத்தின் ஆழத்திலிருந்து.... . . . . . . . . . . . . 18
அருள்பணி. சைமன் ஆல்டஸ்

10. என்னை உருவாக்கிய அன்னை . . . . . . . . . . 19
அருள்சகோ. ஆல்ட்ரின்

11. எங்கே செல்கிறோம்? . . . . . . . . . . . . . . . . . . 20

12. அன்புடன் வரவேற்கிறோம்! . . . . . . . . . . . . . . 21

13. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . . 23

மரியன்னையின் திருப்பெயர்கள் 1

# இறைவனின் புனித அன்னை



"மரியன்னையின் மன்றாட்டு மாலை"யில் அன்னை மரியாவை ஐம்பதுக்கும் மேற்பட்ட பெயர்களைச் சொல்லி நாம் வேண்டுகிறோம். அப்பெயர்கள் அனைத்திலும் மிக மேலான பெயர் "அன்னை மரியா இறைவனின் தாய்" (Holy Mother of God) என்பதுதான். இப்பெயருக்குப் பல சிறப்புகள் இருக்கின்றன.

ஒவ்வோர் ஆண்டும் முதல் நாளில் நாம் கொண்டாடும் பெருவிழா (Solemnity) "அன்னை மரியா இறைவனின் தாய்" என்பது அச்சிறப்புகளுள் ஒன்று. அன்றாடம் நமது செபமாலையின்போது "புனித மரியே, இறைவனின் தாயே" என நாம் இறைவேண்டல் செய்வது இன்னொரு சிறப்பு.

திருஅவை அதிகாரப்பூர்வமாக அறிவித்த நான்கு மரியியல் நம்பிக்கைப் பேருண்மைகளில் (Marian Dogmas) முதலாவது "அன்னை மரியா இறைவனின் தாய்" என்பது மற்றொரு சிறப்பு!

முதல் நான்கு நூற்றாண்டுகளில் வழக்கில் இருந்த மரியன்னைப் பெயர்களுள் ஒன்றுதான் **"தெயோடோகோஸ்"** (Theotokos), அதாவது, "இறைவனைத் தாங்கியவர்". ஆனால், கி.பி. 5ஆம் நூற்றாண்டில் கான்ஸ்டான்டிநோபிளின் ஆயரான **நெஸ்தோரியஸ்** மற்றும் அவரது குழுவினர் மரியாவை இப்பெயரால் அழைக்கக் கூடாது என்றனர். "இயேசுவுக்கு இறை இயல்பு, மனித இயல்பு என இரு இயல்புகள் இருந்தன. இதில் மனித இயல்புக்கு மட்டுமே மரியா அன்னை, இறை இயல்புக்கு அல்ல" என்று அவர்கள் வாதிட்டனர்.

அதே காலத்தில் அலெக்சாந்திரியா நகரின் ஆயராயிருந்த **புனித சிரிலி**ன் தலைமையில் இயங்கிய இன்னொரு இறையியல் குழுவினர் மரியாவை இறைவனின் தாய் என்று அழைப்பதில் எந்தத் தவறும் இல்லை என்று வாதிட்டனர்.

மேலோட்டமாகப் பார்த்தால் இது ஒரு "மரியியல்" சிக்கலாகத் தோன்றினாலும், உண்மையில், இது ஒரு "கிறிஸ்தியல்" சிக்கலே (Christological controversy). காரணம், இயேசு யார்? மனிதனா, அல்லது இறைவனா அல்லது இறைமனிதனா என்னும் கேள்வியே இச்சிக்கலின் அடிநாதம். எனவே, இந்த இறையியல் குழப்பத்தைத் தீர்த்து வைக்க திருச்சங்கத்தைக் கூட்ட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

கி.பி. 431ஆம் ஆண்டில் கூடிய "எபேசு திருச்சங்கம்" "இயேசு மெய்யான கடவுளும், மெய்யான மனிதனுமாக இரு இயல்புகளும் இணைந்தவராக இருக்கிறார். அவர் ஒரே ஆள். மரியா இரு இயல்புகளும் இணைந்த இயேசு என்னும் ஆளின் தாய். எனவே, அவரை இறைவனின் தாய் என்று அழைப்பதில் தவறு ஏதும் இல்லை" என்று அறிவித்தது. "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" (லூக் 1:43) என்று தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத்து மரியாவை அழைத்தது இப்பெயருக்கான விவிலிய ஆதாரம்.

எனவே, நாமும் அவரை "கடவுளின் தாய்" என மகிழ்வுடன் அழைக்கலாம். ★ ★ ★



# 2 கன்னியருள் புனித கன்னி

மரியன்னையின் மன்றாட்டு மாலையில் வரும் இரண்டாவது திருப்பெயர் "கன்னியருள் புனித கன்னி" (Holy Virgin of Virgins) என்பது. அன்னை மரியாவைப் பற்றிய நான்கு மரியியல் நம்பிக்கைப் பேருண்மைகளில் (Marian Dogmas) இரண்டாவது என்னும் பெருமையை இப்பெயர் பெறுகிறது.

அன்னை மரியா முப்பொழுதும் கன்னி என்பதை விவிலிய மற்றும் திருமரபின் ஆதாரங்கள் எடுத்துரைக்கின்றன. எசாயா இறைவாக்கினரை மேற்கோள் காட்டும் மத்தேயு "இதோ, **கன்னி** கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்" (மத் 1:22) என்றே எழுதியுள்ளார்.

நற்செய்தியாளர் லூக்காவும் தமது நூலில் "ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு **கன்னியிடம்** அனுப்பினார்" (லூக் 1:26) என்றும், மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் **கன்னி** ஆயிற்றே" (லூக் 1:34) என்றும் இரு முறை பதிவு செய்துள்ளார்.

விவிலியம் சொல்லும் இந்த உண்மையைத் திருத்தூதர்களும், பின்னர் திருஅவைத் தந்தையர்களும் தங்கள் போதனையாலும், எழுத்துகளாலும் உறுதிப்படுத்தினார்கள்.

இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித இரனேயுஸ், மறைசாட்சியான ஜஸ்டின் இயேசுவின் கன்னிப் பிறப்பைப் பற்றி ஏற்கனவே எழுதியிருந்தனர். மூன்றாம் நூற்றாண்டில் உரோமையின் ஹிப்பொலைட்டஸ் மரியா என்றும் கன்னி என்று போதித்தார். கி.பி. 391ல் புனித அம்புரோஸ், அவருக்குப் பின்னர் புனித அகுஸ்தினார் இருவரும் அன்னை மரியா முப்பொழுதும் கன்னி என்று ஆணித்தரமாக எழுதி, போதித்தனர்.

நிறைவாக, கி.பி. 553ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் கான்ஸ்டான்டினோபிள் திருச்சங்கம் "மரியா என்றும் கன்னி" என்று பறைசாற்றியது.

மரியன்னையின் கன்னிமையின் பொருள் என்ன? அவர் தம் உடல், மனம், ஆன்மா அனைத்தையும் கடவுளுக்கே முற்றிலுமாக அர்ப்பணித்தார். எனவே, கடவுள் அவரை உயர்த்தி, எல்லாத் தலைமுறைகளும் அவரைப் பேறுடையாள் எனப் போற்றச் செய்தார். கடவுளின் திருவுளத்திற்குப் பணியும் அனைவருக்கும் கிடைக்கும் ஆசிகளுக்கு மரியன்னையின் கன்னிமை முன்னடையாளமாக இருக்கிறது.

மரியன்னையின் கன்னிமை திரு அவைக்கும் அடையாளமாக இருக்கிறது. "உங்கள்மீது கடவுள் கொண்டுள்ள அதே அன்பார்வத்தை நானும் கொண்டுள்ளேன். கிறிஸ்து என்னும் ஒரே மணமகனுக்கும் உங்களுக்குமிடையே மண ஒப்பந்தம் செய்துள்ளேன். அவர்முன் உங்களைக் **கற்புள்ள கன்னியாக** நிறுத்த வேண்டும் என்பதே என் விருப்பம்" (2 கொரி11:2) என்கிறார் பவுலடியார். கிறிஸ்துவின் மணமகளான திருஅவை அன்னை மரியாவைப் போலவே "பிளவுபடாத" உள்ளத்துடன் கிறிஸ்துவோடு இணைந்திருக்க வேண்டும். அதற்கு அன்னை மரியா முன்னடையாளமாக விளங்குகிறார்.



அருள்பணி. குமார்ராஜா

# இறைவனின் திருச்சமூகம்



குழந்தை, தன்னுடைய வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு செயலிலும் சொல்லிலும் தன் முன்னேற்றத்தை வெளிப்படுத்துகின்றது. தந்தையானவர், தன் மகனின் ஒவ்வொரு செயலையும் சொல்லையும் உன்னிப்பாகக் கவனிக்கின்றார். தன்னுடைய குழந்தையின் சொல்லுக்குக் கீழ்ப்படிகின்றார். குழந்தைக்கு எது தேவையோ அதைக் கொடுத்து மகிழ்கின்றார். படிப்படியாகப் பேசவும், நடக்கவும், செயலாற்றவும், சிந்திக்கவும், வாசிக்கவும், எழுதவும் துணைபுரிகின்றார்.

தந்தை என்பவர், தன் குழந்தைமீது அதிகாரம் செலுத்துகின்றவர் மட்டுமல்ல, குழந்தையின் நியாயமான தேவை எது என்பதற்கேற்ப நேசக்கரம் நீட்டுபவர்.

மகன் தந்தையின் சாயலிலேயே இருக்கிறான் என்று வைத்துக்கொண்டாலும், தந்தையைப் போலவே இருப்பது சாத்தியமில்லை. குழந்தைக்கு ஒரு தாய் இருக்கிறாள், ஓர் ஆன்மாவும் ஆவியும் இறைவனால் படைக்கப்பட்டுள்ளது.... எனவே, தன்னுடைய பெற்றோரின் சாயலில் இருந்தாலும், அவனுக்கென்று சில தனிச் சிறப்புகள் இருக்கின்றன.

கூர்ந்து கவனிக்கும் ஒரு தந்தை, தன் மகனைப் பாராட்டுவார். ஒரு குழந்தையைப் பாராட்டுவது, குழந்தையை மகிமைப் படுத்துவதாகும்.

இன்றைய உலகில், பாராட்டும் தந்தையரைவிட, பாராட்டும் அன்னையரே மிகுந்துள்ளனர்!

## 2. கனிவுடன் செவிமடுக்கும் இல்லம்

என்னை அன்போடு பாராட்டி மகிழும் இடம் எனது இல்லம். இறைவன் என்னை எப்படிப் படைத்திருக்கின்றாரோ, குறை நிறைகளோடு என்னை ஏற்றுக்கொள்ளும் குடும்பம். என்னை எப்படி வனைய வேண்டுமென்று இறைவன் திட்டமிட்டிருக்கின்றாரோ அப்படியே நான் வளர - உயர வேண்டும்.... இதற்கு மாறாக, என் பெற்றோரின் விருப்பத்திற்கேற்ப என்னை மாற்ற முயல்வது முறையல்ல.

என்னை அன்புடன் பாராட்டி, சொல்லுக்குச் செவிமடுத்து, முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதையே விரும்புவேன். என்னுடைய சொற்களை அன்புடன் கேட்கவில்லை என்றால், நான் எனது சுய மரியாதையை இழந்து விடுவேன்.... சுய மரியாதை இல்லையெனில், அச்ச உணர்வு தலைதூக்கும், என் வளர்ச்சியே பாதிக்கப்படும்.

✷ **இல்லம் என்றால்,** அங்கே வாழும் ஒவ்வொருவரும் மற்றவருடைய உரையாடலுக்குக் கனிவுடன் செவிமடுக்க வேண்டும். அன்பு இருந்தால்தான், கேட்கவும், ஏற்கவும் இயலும்.

என்ன சொல்கிறார்கள் என்று கேட்பது மட்டும் முக்கியமல்ல, அதன்படி நான் கீழ்ப்படிய வேண்டும்.

இந்த நிலையில், முற்காலக் கிறித்தவத் துறவிகளின் வாழ்க்கை முறை, இன்றையக் குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும் நல்ல பாடமாக அமையும்.

✷ துறவற சபை அதிபர்களுக்கு மட்டுமின்றி, ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து கொண்டனர். **புனித பெனடிக்ட்** ஆணை, இயல் 71-இல், "துறவியர், மேல்நிலைத் தந்தையர்களுக்கு மட்டுமின்றி ஒவ்வொருவருக்கும் கீழ்ப்படிந்து வாழும் போது, இறைவனை நோக்கி நாம் பயணிக்கிறோம்" - என்று எடுத்துரைக்கிறது.

**‘OBEY’** (கீழ்ப்படிந்து) என்ற சொல், **‘செவியைத் திருப்பு, கேட்பதற்கு’** என்றமைகிறது. பிறருடைய விருப்பம் அறிய, அவர்களுடைய தேவையை அறிந்து உதவ, எப்போதும் கவனமுடன் செவிமடுக்க வேண்டும்.

“நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்” (பிலி 2:4).

கிறிஸ்தவ வாழ்வு என்பது சமூகம். தனித்துவமல்ல. சமூகம் என்றால், பிறருடைய சொல்லுக்கு செவிமடுத்து, கீழ்ப்படிந்து, ஒருவர் மற்றவரோடு மகிழ்ந்து வாழ்வது. “மகிழ்வாரோடு மகிழுங்கள்: அழுவாரோடு அழுங்கள்” (உரோ 12:15).

✷ மனித இயல்பிலே, நாமனைவருமே ‘சுயம்’ / தன்னலம் விரும்பிகளாகவே இருக்கிறோம்... இந்தச் சுயத்திலிருந்து விடுபட்டு, பொதுநலன் என்ற பண்பிற்குள் வந்தாக வேண்டும்.

“மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத் 25:40).

✷ செவிமடுப்பதும், அதற்கேற்பச் செயலாற்றுவதும்தான் இறைச் சமூகத்தின் முக்கியத்துவம். “அடுத்தவருடைய நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள்” (உரோ 15:2).

கேட்பதும், செயலாற்றுவதும் கிறித்தவ சமூகத்தின் நல்லிணக்கமாகும்.

**கூர்ந்து கேட்கும் இதயம்**

குடும்பங்களில் பெற்றோர் - சமூகத் தலைவர்கள் - ஆட்சியாளர்களுக்குத் தேவையானது, கூர்ந்து கேட்கும் இதயம். இறைமக்களின் பேரரசனாக **சாலமோன்** பொறுப்பேற்றபோது, கூர்ந்து கேட்கும் இதயத்திற்காக இறையருளை வேண்டினார்.

“என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் அடியேனை என் தந்தை தாவீதுக்குப் பதிலாக அரசனாக்கியுள்ளீர். நான் செய்வதறியாத சிறுபிள்ளை. இதோ! உமக்கென நீர் தெரிந்துகொண்ட திரளான மக்களிடையே அடியேன் இருக்கிறேன். அவர்கள் எண்ணிக் கணிக்க முடியாத மாபெரும் தொகையினர். எனவே, உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும், இல்லாவிடில், உமக்குரிய இம்மாபெரும் மக்கள் இனத்திற்கு நீதிவழங்க யாரால் இயலும்?” - என்று கேட்டார்.

சாலமோன் இவ்வாறு கேட்டது ஆண்டவருக்கு உகந்ததாய் இருந்தது. கடவுள் அவரிடம், “நீடிய ஆயுளையோ, செல்வத்தையோ நீ கேட்கவில்லை. உன் எதிரிகளின் சாவையும் நீ விரும்பவில்லை. மாறாக, நீதி வழங்கத் தேவையான ஞானத்தை மட்டுமே கேட்டிருக்கிறாய். இதோ! நான் இப்பொழுது நீ கேட்டபடியே செய்கிறேன். உனக்கு நிகராக, உனக்கு முன்னே எவரும் இருந்ததில்லை. உனக்குப் பின்னே இருக்கப் போவதுமில்லை. அந்த அளவுக்கு ஞானமும் பகுத்தறிவும் நிறைந்த உள்ளத்தை உனக்கு வழங்குகிறேன்” என்றார் (1அரசர்கள் 3:7-13).

கூர்ந்து செவிமடுக்கும் இதயம் வேண்டும் என்று சாலமோன் மன்றாடினார். யாருடைய வார்த்தைக்கு?.... இறைவனுக்கும், அவருடைய மக்களுடைய வார்த்தைகளுக்கும். இறைவார்த்தைக்குச் செவிமடுக்கவும், இறைமக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யவும் கூர்ந்து கவனித்தார்.

- (‘COMMUNITY IN THE LORD’ - தமிழாக்கம்)



**கலாபன் வாஸ்**



# புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கில் மரபுகளும் மாற்றங்களும் 3

அருள்தந்தை **லெரின் டிரோஸ்** (2014-2019) காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மரபுகள் யாவும் பங்கின் ஒழுங்குகளாக மாற்றப்பட்டன. பனிமயத் தாயின் பெருவிழாவின் நற்கருணைப் பெருவிழா நாளில் மட்டுமே புதுநன்மை வழங்கப்படும். ஆகஸ்ட் மாதம் முழுக்க தனிப் புது நன்மை விழாக்கள் அனுமதிக்கப்படா. மாதத்தின் முதல் ஞாயிறு மறைக்கல்வி மாணவர்களுக்கான சிறப்புத் திருப்பலி நடைபெறுவதால், அன்று திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது என்னும் புதிய மரபுகளை உருவாக்கினார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளாக (2019-2024) இப்பேராலயத்தின் பங்குத் தந்தையாகப் பணியாற்றும் பேறுபெற்ற நானும் என் பங்கிற்கு வழிபாட்டிலும், மக்களின் பண்பாட்டுப் பார்வையிலும் சில புதிய மரபுகளை உருவாக்கியுள்ளேன்.

பனிமய அன்னையின் புகழ் பரவவும், அந்த அன்னையிடமிருந்து பெற்றுக் கொள்ளும் ஆசிகளைப் பரவலாக்கவும் தொடங்கப்பட்ட மாதாந்திர "பனிமய நோன்பு வழிபாடு" கடந்த 40 மாதங்களைத் தாண்டி நடைபெற்று வருகிறது. வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போர், திருமண வரனுக்காக, குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போர், தேர்வுகள் எழுதுவோர் போன்ற குறிப்பிட்ட தேவையினருக்காக மாதம் ஒருமுறை நடத்தப்படும் இந்த நோன்பு வழிபாட்டில் ஆர்வத்தோடு பங்கேற்போரின் எண்ணிக்கை பெருகுவதோடு, தேவைகளைத் தெரிவிப்பவர்கள், தேவைகள் நிறைவேறி சாட்சிய நன்றி பகர்கிறவர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. தேவையில் இருப்போரையும் தாண்டி, அவர்களுக்காக நாமும் மன்றாடவேண்டும் என்னும் மனநிலை மாற்றத்தையும் பேராலயம் வருவோரிடம் இந்தப் புதிய மரபு ஏற்படுத்தியுள்ளது. எனவேதான், இந்தக் கருத்துகளுக்காக ஏழு நாள்கள் ஏறெடுக்கப்படும் தொடர் வேண்டுதலை எல்லாத் திருப்பலிகளிலும் மக்கள் ஆர்வத்தோடு செபித்து வருகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் பனிமய அன்னையின் பெருவிழாவுக்கு ஆயத்தமாக 30 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று புதிய மரபாக மாறியுள்ளது. அதிலும், கடந்த ஆண்டு (2023) 16ஆவது தங்கத் தேர்ப் பெருவிழாவுக்காக நடைபெற்ற 300 நாள் தொடர் மன்றாட்டு, 100 நாள் தொடர் மன்றாட்டு, 30 நாள் தொடர் நோன்பு ஆராதனை ஆகியவற்றில் ஏராளமானவர்கள்

ஆர்வத்தோடும், அர்ப்பணத்தோடும் பங்கேற்றனர்.

திருமணம் போன்ற குடும்ப விழாக்களில் வெடி போட்டு பணத்தைக் கரியாக்கி, சுற்றுச் சூழலையும் மாசுபடுத்தும் பழக்கத்தை மாற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டது. அதுபோல, நமது தமிழ் பண்பாட்டுக்கு மாறான, குழந்தைகளையும், நோயாளர்களையும் அச்சுறுத்துகின்ற செண்டை மேளக் கலாச்சாரத்தையும் மாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு 80% ஆதரவு கிடைத்தது என்பது மனநிலை மாற்றத்திற்கான ஓர் அறிகுறி.

இவை போன்ற பழைய பழக்கங்களை உடைத்து, புதிய மரபுகளை ஏற்படுத்தும் பல முயற்சிகள் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் வேறிடத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மரபு மாற்றங்களைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இறையாசி கிடைக்கட்டும்.

“மாற்றம் ஒன்றுதான் மாறாதது” என்பதே மானிட வாழ்வு மற்றும் வரலாற்றின் நியதி. அதற்கேற்ப எல்லாப் பங்குகளும், எல்லா மானிட நிறுவனங்களும் மாற்றக்கூடாத மரபுகளைப் போற்றியும், மாற்ற வேண்டியவற்றை மாற்றியும் தங்களையே தகவமைத்துக்கொள்ள வேண்டும் என்பதே இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழியாகத் திருஅவை விடுத்துள்ள அறைகூவல். இயேசுகிறிஸ்து பிறப்பின் யூபிலி 2025ஐக் கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் நாம் இந்த அழைப்பை உளமாரத் தழுவிக்கொள்வோமாக.

**அருள்பணி. குமார்ராஜா**



# பனிமய சாட்சியங்கள்

*பனிமய சாட்சியம் : 102*

## அபியா – டெல்பின்
### மணக்குடி (கன்னியாகுமரி மாவட்டம்)

எங்களுக்கு திருமணம் முடிந்து ஆறு ஆண்டுகள் குழந்தை இல்லை. பல்வேறு மருத்துவம், செயற்கை கருத்தரித்தல் முறை என பல வழிகளில் சிகிச்சை மேற்கொண்டும் எந்த பலனும் இல்லாமல் போனது. அப்போது எனது நண்பர் அருட்சகோதரர் ஆல்ட்ரின் அவர்கள் 17.12.2023 அன்று நடைபெற்ற குழந்தை வரத்திற்கான பனிமய நோன்பு வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறும், நிச்சயம் குழந்தை வரம் கிடைக்கும் என்றும் நம்பிக்கையுடன் கூறினார். நோன்பு வழிபாடு அன்று மிக கனமழை எச்சரிக்கை விடுத்திருந்தனர். எனினும் வழிபாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று மாதாவிடம் மன்றாடினேன். நல்லபடியாக வழிபாட்டிலும் கலந்துகொண்டு மாதாவிடம் கண்ணீரோடு செபித்தோம். மீண்டும் எந்த இடையூறுமின்றி வீடு திரும்பினோம். ஜனவரி மாதம் எனக்கு விசா கிடைத்து பிப்ரவரி மாதம் நான் சவுதி அரேபியாவிற்கு சென்றேன். அந்த மாதமே நான் கருவுற்றேன். ஆறு வருடங்களில் நிகழாத ஒன்று நம் பனிமய அன்னையின் பரிந்துரையால் நிகழ்ந்துள்ளது. பனிமயத் தாயே உமக்கு கோடான கோடி நன்றி!



# ஐந்து ஆண்டுப் பணிகளின் தாக்கம்!



**கடந்த ஐந்து (2019-2024) ஆண்டுப் பணிகள் தங்கள் வாழ்விலும், இந்தப் பங்கிலும் ஏற்படுத்திய தாக்கம் என்ன? என்ற கேள்விக்குப் பங்கின் பிரதிநிதிகள் சிலரின் பகிர்வுகள்:**



1. **திருமதி லீனா டோம்னிக், தலைவி, திருக்குடும்ப சபை.** இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால், எங்கள் மகன், மகள் இருவரும் ஐந்து திருப்பாடல்களைக் குடும்ப செபத்தில் மனப்பாடமாகச் செபிக்கிறார்கள். பனிமய நோன்பு வழிபாட்டின் மூலம் என் தம்பிக்கு நல்ல திருமண (இல்லற) வாழ்க்கை அமைந்தது.



2. **திரு. கென்னடி வாஸ், பங்கு மேய்ப்புப் பணிக்குழு முன்னாள் செயலர்.** ஆண்டவருக்கு நன்றி சொல்லவும், புகழ் கூறவும் நானும், என் குடும்பத்தினரும் கற்றுக் கொண்டோம். வாழ்நாள் முழுவதும் இதை நானும், என் குடும்பததினரும் மறக்க மாட்டோம்.



3. **திரு. பி. ஏ. எல். ஜாய் ரோச், பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபை முன்னாள் தலைவர்.** அன்னையின் சன்னதியில் விவிலியத்தின் ஆழம் உணர்த்தப்பட்டது சிறப்பு. ஏழைகளுக்கான அறப்பணிகள் பனிமய அன்னையைப் பெருமைப்படுத்தின. பேராலய வரலாற்றில் சிறப்பான ஐந்து ஆண்டுகள்.

**4. திருமதி. பாத்திமா லசிங்டன், பங்கு மகள்.** அன்றாட வாழ்வில் நம்மை அற்புதமாக காத்து வழிநடத்தும் இறைவனுக்கு நன்றி ஆராதனை செலுத்தியது திருப்பலியின் ஒரு புதிய சிறப்பம்சம். மாலைத் திருப்பலியில், பேராலய திருப்பலிப் பீட முற்றத்தில் ஆர்வமுடனும், அர்ப்பணத்துடனும் குழுமியுள்ள சிறார்களை காண்பது இதுவரை கண்டிராதது. அன்னையின் 16ஆவது தங்கத் தேரோட்டம் இம்மியளவு பிசிறில்லாது சிறப்பாக நடந்தேறியது அற்புத நிகழ்வாக அமைந்தது.





**5. திரு. மனுவேல் மோத்தா, மரியாயின் சேனை.** மக்களின் இறைவார்த்தைத் தாகத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் 100 விவிலியப் பாசறைகள் நடத்தப்பட்டது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மாதந்தோறும் ஒரு சிறப்பு கருத்துக்காக நடத்தப்பட்ட நோன்பு வழிபாடு இறைமக்களின் விசுவாச வாழ்வில் ஒரு மைல் கல்லாக அமைந்தது.

**6. முனைவர் ஜாக்சன், தலைவர், வின்சென்ட் தே பவுல் சபை. நேர மேலாண்மை:** பல்வேறு பணிகளை குறித்த நேரத்தில் நிறைவேற்ற திட்டமிட்டதும், திட்டமிட்டப்படி செயலாற்றியதும் மிகச் சிறப்பாக இருந்தன. **ஆவணப்படுத்துதல்:** பங்கில் நடைபெறும் கூட்டங்களையும், நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தியது மிகவும் அருமை. நாளைய வரலாற்று பார்வைக்கு அது உரம் சேர்க்கும். தங்கதேர் ஆவணம் ஒரு சான்று. **புதிய சிந்தனைகள்:** வழிபாடுகளில் நல்ல மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன.





**7. செல்வி ஜெனிஃபர், லூர்துமாதா இளம்பெண்கள் சபை.** செபத்தின் வல்லமையால் கடந்த ஐந்து ஆண்டுகளாக கடவுளின் கருணை என்னும் கேடயத்தால் இந்தப் பங்கு பாதுகாக்கப்பட்டது. தங்கத் தேர்ப் பெருவிழாவுக்கு முன்னர் 30 நாள் அல்லது 100 நாள் தொடர் மன்றாட்டு செபித்தது பலருக்கும் ஒரு பாடமாக அமைந்தது. தனிப்பட்ட முறையில் நோன்பின் வலிமையை நான் உணர்ந்து கொண்டேன்.

**8. திருமதி. சகாயம் பெனடிக்ட். தலைவி, பொம்பெயி செபமாலை மாதா சபை.** கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தப் பங்கில் வாசகம் வாசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு, பங்கு மக்கள் ஊக்குவிக்கப்பட்டது சிறப்பு. வாசகம், இறைப்புகழ்ச்சி வாசிக்க பிற பங்கு மக்களுக்கும் வாய்ப்பு கொடுத்தது பலரின் பாராட்டுகளையும் பெற்றது.



# ஐந்தாண்டுகளில் என்ன மாற்றங்கள் நிகழ்ந்தன?

“மாற்றம் ஒன்றுதான் மாறாதது” என்பது இயற்கையின் நியதி. இறைவன் ஒருவர்தாம் என்றும் மாறாதவர். மற்ற அனைவரும் மாறிக்கொண்டேயிருக்கின்றோம். மாற வேண்டும். அதுவே நாம் வாழ்கிறோம், இயங்குகிறோம் என்பதற்கான அடையாளம்.

இந்த மாற்றம் தனி மனிதர், குடும்பம், சமூகம் எனப் பல தளங்களிலும் நிகழ வேண்டும். ஒரு பங்கைப் பொறுத்தவரையில் ஆன்மீக வாழ்வு என்னும் அருள்வாழ்வில் நேர்மறையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும். இல்லாவிட்டால், எதிர்மறையான மாற்றங்கள் நிகழ்ந்து பல தீமைகள் விளைந்துவிடும்.

பனிமய அன்னை பேராலயப் பங்கில் கடந்த ஐந்தாண்டுகளில் (2019-2024) நேர்மறையான மாற்றங்கள் நிகழ பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன, எதிர்காலத்தில் எத்தகைய கனிகளைப் பெற்றுத்தரும் என்பன கூர்ந்து நோக்கவேண்டிய கேள்விகள்.

இவற்றுக்கான விடைகளை சற்று மேலோட்டமாகவே நாம் காணலாம். பேராலயப் பங்கு மக்களின் வழிபாடு, செப வாழ்வு, மனநிலை, செயல்பாடு, வாழ்வியல்; மாற்றங்கள், விழிப்புணர்வு, சமூகப் பொருளியல் தளம் ஆகியவற்றில் மாற்றங்கள் கொணர கடந்த ஐந்து ஆண்டுகளில் முனைப்புகள் எடுக்கப் பட்டன. அவற்றில் சிறந்த பத்து மாற்றங்களை இங்கே காண்போம்:

**1. இறைபுகழ்ச்சி.** ஐந்தாண்டுகளுக்கு முன்னால் பேராலயப் பங்கு மக்களுக்கும், இப்பேராலய வழிபாடுகளில் நாள்தோறும் பங்குபெறும் பிற பங்கு மக்களுக்கும் இறைபுகழ்ச்சி என்பது புதிதாக இருந்தது. குறிப்பாக, தந்தை, மகன், தூய ஆவியார் மூவருக்கும் நாம் புகழும், மாட்சியும் செலுத்த வேண்டும். நற்கருணை பெற்றதும் நாம் நன்றி செலுத்த வேண்டும். கைகளை உயர்த்தி ஆண்டவரைப் போற்ற வேண்டும். கரங்களை விரித்து செபமாலை செபிக்க வேண்டும். முழந்தாள்படியிட்டு மன்றாட வேண்டும் ஆகியன கத்தோலிக்கத் திருஅவையின் மரபார்ந்த செயல்பாடுகளே என்பது நினைவூட்டப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டன. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவை இயல்பானவையாக மாறிவிட்டன.

**2. இறைவேண்டல்.** மரபு சார்ந்த செபங்களை மட்டுமே செபித்துவந்த மக்களுக்கு திருவழிபாட்டு மன்றாட்டுகள் (“மனத்துயர் மன்றாட்டு”), விவிலிய மன்றாட்டுகள் (திருப்பாடல்கள்), சொந்த செபங்கள் (திருப்பலியின் இறைபுகழ்ச்சி) ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன. இறையடியார்களுக்கு 1000 நாள் தொடர் மன்றாட்டு, தங்கத் தேர்ப் பெருவிழாவுக்காக 300 நாள் தொடர் மன்றாட்டு, 100 நாள் வேண்டல், 30 நாள் தொடர் ஆராதனை போன்றன செயல்படுத்தப்பட்டு, வரவேற்பு பெற்றன. இறைவேண்டலில் விவிலியத்தின் பங்கு அதிகரிக்கப்பட்டது. அதற்கு



உதவியாக 105 விவிலியப் பாசறைகள் நடத்தப்பட்டன.

**3. நோன்புகள்.** நம் திருஅவையின் நெடுமரபிலுள்ள உண்ணா நோன்பு ஊக்கப் படுத்தப்பட்டது. கூடவே, ஊடக நோன்பு (தொலைக்காட்சி, அலைபேசி, இணையதளம் இழப்பு), சொல் நோன்பு (பேச்சைக் குறைத்தல், இன்சொல் பண்பாடு) ஆகியனவும் அறிமுகப்படுத்தப்பட்டன. தவக்காலத்தில் வேறு எந்தப் பங்கிலும் நடைபெறாத நிகழ்வாக சாம்பல் புதன் மற்றும் குருத்து ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நோன்பு வழிபாடு நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஒரு சிறப்புக் கருத்துக்காக பனிமய நோன்பு வழிபாடு நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நடத்தப்பட்டது.

**4. நேர மேலாண்மை.** வழிபாடுகள், பாசறைகள், மேய்ப்புப் பணிக்குழுக் கூட்டங்கள் அனைத்திலும் நேர மேலாண்மை சிறப்பாகக் கடைப்பிடிக்கப் பட்டது. திட்டமிட்டு நேர மேலாண்மை செய்ய மக்கள் ஊக்குவிக்கப்பட்டனர். பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். பங்கு அலுவலகத்துக்கோ, பங்குத் தந்தைக்கோ முன்கூட்டியே தகவல் கொடுக்க வேண்டும். தேவையின்றி அலையக்கூடாது போன்றவை பழக்கங்களாக்கப்பட்டன.

**5. தகவல் தொடர்பு.** திருமண அறிக்கை, மரண அறிக்கை போன்ற பங்கின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் வாட்ஸ் அப் வழியாகப் பங்கு மக்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டன. ஞாயிறுதோறும் திருப்பலி களில் வாசிக்கப்படும் ஞாயிறு அறிக்கை முந்தின நாள் மாலையே வாட்ஸ் அப்பில் அனுப்பப்படுவது இந்த பங்கில் மட்டுமே நடக்கும் ஓர் அதிசய உண்மை. அதுபோல, திருமணம், திருமுழுக்கு, திருவிருந்து போன்ற அருள்சாதனங்கள் பெறவிருப்போர் செய்யவேண்டியன பற்றிய தெளிவான "தகவல் தாள்" அனைவருக்கும் வழங்கப்பட்டது. தவக்காலத்தில் வருகை தரும் திருப்பயணிகளின் தங்குமிடம், கழிப்பறை வசதிகள், திருப்பலி தொடர்பான தகவல்கள் அனைத்தும் வாட்ஸ் அப் வழியாக பலருக்கும் அனுப்பப்பட்டது.

**6. வெளிப்படைத்தன்மை.** பங்கின் நிதி நிலை அறிக்கை மேய்ப்புப் பணிக்குழு உறுப்பினர்களுடன் பகிரப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019-2024) தங்க

நகைகளைக் காணிக்கையாக வழங்கிய 64 பேரின் பெயர்களும் பனிமய இதழில் அச்சிடப்பட்டன. தங்கத் தேருக்குக் காணிக்கை வழங்கிய அனைவரின் பெயர்களும் வாட்ஸ் அப் வழியாகப் பகிரப்பட்டன. தங்கத் தேர் மலரிலும் அச்சிடப்பட்டன.

**7. பகிர்வும் சமத்துவமும்.** பங்கிலுள்ள தன்னார்வப் பணிகள் அனைத்தும் ஆர்வமுள்ள அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வாறு, சமத்துவம் நிலைநாட்டப்பட்டது. எடுத்துக்காட்டாக, திருப்பலியில் வாசகம் வாசித்து, இறைபுகழ்ச்சி மன்றாட்டு செபிப்பதற்கு தற்பொழுது 300க்கும் மேற்பட்டவர்களுக்கு வாய்;ப்பளிக்கப்படுகிறது. மாதமொருமுறை பிற பங்கைச் சேர்ந்தவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதுபோலவே, நோன்பு வேண்டுதல், முதியோருக்கு நற்கருணை வழங்குதல் போன்றவற்றிலும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அருள்சாதனங்கள் வழங்குவதிலும் அனைவருக்கும் ஒரே மாதிரியான நெறிமுறைகள் பின்பற்றப் பட்டன. யாருக்கும் தனிச் சலுகை வழங்கப்படவில்லை.

**8. புதியன பற்றிய திறந்த மனநிலை.** புதிய கருத்துகள், சொல்லாடல்கள், சிந்தனைகள், வழிபாட்டு முறைகள், செயல்பாடுகள் ஆகியன அறிமுகப்படுத்தப் பட்டு, நாளடைவில் பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்ளும் திறந்த மனநிலை உருவாக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, திருமண விழாக்களின்போது பல தீமைகளுக்குக் காரணியாக விளங்கும் வெடிகள் மற்றும் செண்டை மேளம் ஆகியன தடை செய்யப்பட்டன. திருமணத் திருப்பலியில் வழிபாட்டுக்கும், மணமக்களுக்கும் இடையூறு வராத வகையில் நடைபெற இரு வீட்டார் சார்பிலும் ஒரு கேமரா மேன், ஒரு வீடியோகிராபர் என இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். அருள் சாதனங்கள் பெறும் முன் விவிலியப் பாசறைப் பங்கேற்பு கட்டாயமாக்கப்பட்டது. இவை அனைத்தையும் பெரும்பாலானோர் திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டனர்.

**9. ஆவணப்படுத்துதல்.** பங்கின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் பனிமயம் இதழில் ஆவணப்படுத்தப்பட்டன. “தங்கத் தேர் 2023 ஓர் ஆவணம்” என்னும் சிற்றேடு எதிர்காலத் தலைமுறையின் உதவிக்காக வெளியிடப்பட்டது. பங்கு மேய்ப்புப் பணிப்பொதுக்குழுவின் அறிக்கைகள், வருகைப் பதிவு, வாசகர் பட்டியல் ஆகியவையும் ஆவணமாக்கப்பட்டன.

**10. அறப்பணிகள்.** பங்கின் நிதியில் இருந்தும், பங்கு மக்கள், பனிமயத் தாயின் பிள்ளைகளுடைய நன்கொடைகளிலி ருந்தும் ஏராளமான அறப் பணிகள் செய்யப்பட்டன. இரண்டு கூட்டுத் திருமணங்கள் (39 இணையர்கள்), ஆறு பேருக்கு சொந்த வீடு கட்ட 25 இலட்ச ரூபாய் உதவி, கல்வி, திருமணம், மருத்துவம், வாழ்வாதாரம், அடக்கம் போன்றவற்றுக்கு நிதி உதவி, வெள்ளிதோறும் திருச்சிலுவை அன்பு உணவு என ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் அன்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. நன்கொடைகள், காணிக்கை தந்தோர் அனைவரும் ஏற்பிசைவு செய்யப்பட்டு, பெயர்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்களின் ஆசிகளுக்காகத் திருப்பலிகள் நிறைவேற்றப் பட்டன. “கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்” என்னும் இறைமொழி மரபாக மாற்றப்பட்டுள்ளது. ★ ★ ★



# கடந்த ஐந்து ஆண்டுகளில் பேராலயப் பங்கின் சில தனித்துவ நிகழ்வுகள்



1. **1000 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு.** பேராலயப் பங்கின் பெருமிதங்களான இறையடியார் அந்தோனி சூசைநாதர், இறையடியார் அகுஸ்தின் பெரைரா இருவரும் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமென்றும், இவர்களின் பரிந்துரையால் பங்கின் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றும் 1000 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு 2019 நவம்பரில் தொடங்கி, 1000 நாள்கள் நடைபெற்று 13.08.2022 அன்று நிறைவுபெற்றது. ஒவ்வொரு நாளும் ஓர் இல்லத்திற்கு இறையடியார்களின் திருவுருவப் படம் எடுத்துச் செல்லப்பட்டு, இறைவேண்டல் செய்யப்பட்டது ஒரு புதுமையான நிகழ்வு.

2. **இல்வசத் திருப்பலிக் கருத்துகள்.** புனித சகாய மாதா பீடத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இறைமக்கள் தங்கள் திருப்பலிக் கருத்துகளைப் போடலாம். அவை ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலைத் திருப்பலியில் வாசிக்கப்பட்டு, அந்தக் கருத்துகளுக்காக கட்டணமின்றித் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. கடந்த 5 ஆண்டுகளில் 143 வாரங்களில் 2424 திருப்பலிக் கருத்துகள் நிறைவேற்றப்பட்டதாக பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. **வெள்ளிதோறும் திருச்சிலுவை அன்பு உணவு.** பேராலயத்தின் திருச்சிலுவை சிற்றாலயத்தில் கடந்த காலங்களில் திருச்சிலுவை செபக்குழுவினரால் நடைபெற்ற இந்நிகழ்வு 2019 முதல் பங்குத் தந்தையின் நேரடி மேலாண்மையில் நடைபெறுகிறது. நண்பகல் 12.00 முதல் 12.30 வரை இறைவேண்டலும், தொடர்ந்து அன்பு உணவும் பரிமாறப்படுகிறது. வருகிறவர்கள் அனைவருக்கும் உணவு பகிரப்பட தொண்டர் குழு உருவாக்கப்பட்டுள்ளது. தாராள உள்ளம் கொண்ட நன்கொடையாளர்களின் பங்கேற்புடன், பேராலய நிதியும் பயன்படுத்தப்படுகிறது.

4. **செவ்வாய் தோறும் குணமளிக்கும் நற்செய்தி வழிபாடு.** சகோ. ரிச்சர்ட் அவர்களின் தலைமையில் திருச்சிலுவை செபக்குழுவினரால் நடைபெற்ற செவ்வாய் நற்செய்திக் கூட்டங்கள் தற்பொழுது பங்குத் தந்தையின் மேலாண்மையில் நடைபெறுகின்றன. அருள்பணியாளர்கள் அழைக்கப்பட்டு, பிற்பகல் 01.00 முதல் மாலை 04.00 வரை இறைபுகழ்ச்சி, இறைச் செய்தி, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி ஆகியன நடைபெற்றன. சராசரியாக 100 பேர் கலந்துகொண்டனர். இதுவரையில் 175 வாரங்கள் இவ்வழிபாடு நடைபெற்றுள்ளது.

5. **பனிமயம் இதழில் பனிமயப் பகிர்வு செய்தி மடல்.** கடந்த 5 ஆண்டுகளாக பனிமயம் இதழின் கடைசி சில பக்கங்கள் "பனிமயப் பகிர்வு" என்னும் தலைப்பில்,

பேராலயப் பங்கு மக்களுக்கான செய்தி மடலாக ஒதுக்கப்பட்டன. இப்பக்கங்களில் "பனிமயச் சுவடுகள்" பகுதியில் பங்கில் நடைபெற்ற 550 முக்கிய நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்பட்டன. பங்கில் அடுத்த மாதத்தில் நிகழவிருப்பவை அச்சிடப்பட்டன. திருமுழுக்கு பெற்றவர்கள், திருவிருந்து பெற்றவர்கள், திருமண அருள்சாதனம் பெற்றவர்கள், நோயில் பூசுதல் பெற்றவர்கள், இறைவனில் இளைப்பாறியவர்கள் ஆகியோரின் விபரங்கள் அச்சிடப்பட்டன.

6. **திருமணத் திருப்பலிக்கான கட்டுப்பாடுகள்.** பேராலய வளாகத்தில், ஆலய முன் சாலையில், கொடி மர வளாகத்தில் வெடி வெடிப்பது மிகக் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். செண்டை மேளம், தான்டியா மேளம், குஜராத்தி மேளம் பயன்படுத்த அனுமதி இல்லை. மணமகன் மற்றும் மணமகள் இரு வீட்டார் சார்பாக புகைப்படக்காரர் ஒருவர், வீடியோக்காரர் ஒருவர் என மொத்தம் இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்னும் மூன்று கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு 90% வெற்றி பெறப்பட்டது. மேலும், பேராலய முற்றத்திற்குள் செருப்பு, ஷூ அணியாமல் வரவேண்டும் (மணமக்களுக்கு அனுமதி உண்டு). திருமண நேரத்தில் கை தட்டுவதோ, பூக்கள் போடுவதோ கூடாது என்னும் பேராலய மரபுகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

7. **மணமக்களுக்கான சிறப்பு மன்றாட்டு.** திருமணத் திருப்பலிகளின்போது நற்கருணைத் திருவிருந்திற்குப் பின் இறைபுகழ்ச்சியும், தொடர்ந்து பனிமயத் தாயிடம் மணமக்களுக்காகப் பரிந்து மன்றாடும் சிறப்பு மன்றாட்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன.

8. **திருமணப் பதிவு.** திருமணம் முடிந்தபின்னர், அரசின் பதிவு அலுவலகத்தில் திருமணத்தைப் பதிவு செய்துகொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். அரசின் சான்றிதழ் நகல் ஒன்றையும் பெற்றுக்கொள்கிறோம். எண்பது விழுக்காடு திருமணங்கள் பதிவுசெய்யப்பட்டுவிட்டன.

9. **திருத்தந்தையின் கருத்துகளுக்காக மன்றாட்டு.** ஒவ்வொரு மாதத்தின் திருத்தந்தையின் கருத்து முதல் திருப்பலிக்கு முன்னதாக திரையில் காட்டப்படுகிறது. மாதம் இருமுறை ஞாயிறு திருப்பலியில் அக்கருத்துக்காக மன்றாடப்படுகிறது.

10. **யூட்யூப் காணொளிகள்.** ஸ்நோஸ் பசிலிக்கா இணைய தளத்தோடு ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் அலைவரிசையும் உள்ளது. நேரலையாகக் காட்டப்படும் அனைத்துப் பேராலய நிகழ்வுகளும் இதில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. தவிர, அருள்பணி. குமார்ராஜாவின் **"அன்புடன் அருள்வேந்தன்"** யூட்யூப் சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள 1000 காணொளிகளும் பங்கின் அனைத்து அன்பியங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை

பனிமய சாட்சியம் : 103

# பாதுகாத்த பனிமயத் தாய்



கடந்த ஐந்து ஆண்டுகளில் (2019-2024) இப்பேராலய அதிபராகவும், பங்குத் தந்தையாகவும் பணியாற்றியபோது என்னுடைய வாழ்விலும், பணியிலும் மாதாவின் பரிந்துரையால் நான் பெற்ற ஆசிகள் எண்ணற்றவை. அவற்றில் சிலவற்றை சாட்சியாகப் பகிர விரும்புகிறேன்.

முதன் முதலில், இந்தப் பேராலய அதிபராகவும், பங்குத் தந்தையாகவும் நியமிக்கப்பட்டதே எனது வாழ்வின் பெரும்பேறு. நான் கனவிலும் கருதாத ஒரு வாய்ப்பை கடவுள் எனக்குத் தந்தார். அவருக்கே நன்றியும், புகழும் செலுத்துகிறேன்.

ஐந்து ஆண்டுகளும் எனது பணியையும், வாழ்வையும் நம் பனிமயத் தாய் நிறைவாக ஆசீர்வதித்தார்கள். எனது பணிக்கு எதிரான முன்னெடுப்புகள், சதி முயற்சிகள், என் நல வாழ்வுக்கு எதிரான பெருநோய்கள், விபத்துகள் போன்ற அனைத்திலிருந்தும் நம் அன்னை என்னைப் பாதுகாத்தார்கள். கவலையின்றி, மகிழ்ச்சியோடு வாழச் செய்தார்கள். அதற்காகப் பனிமயத் தாயின் பாதம் பணிந்து நன்றி சொல்கிறேன்.

பனிமய அன்னையின் 16ஆவது தங்கத் தேர்ப் பவனியும், பெருவிழாவும் என் வாழ்வின் மிகப் பெரிய நினைவாக இருக்கும். 2022, 2023 ஆண்டுகளில் நடைபெற்ற தஸ்நேவிஸ் மாதா கூட்டுத் திருமணங்கள் மகிழ்ச்சியான தருணங்கள். ஐந்தாண்டுகளில் நடைபெற்ற ஏராளமான அறப் பணிகள் எனக்கு மனநிறைவைத் தந்தன

நாள்தோறும் தாயின் திருப்பீடத்தில் திருப்பலி நிறைவேற்றும் மாபெரும் பேறு, தாயின் திருச்சுருபத்தின் முன்பாக மண்டியிட்டு மன்றாடும் அருள், சனிக்கிழமைதோறும் கைகளை விரித்து செபமாலை செபிக்கும் வரம், மரியன்னையின் மேன்மைகளைப் போதித்த எண்ணற்ற மறையுரைகள், மரியன்னையின் புகழ்பரப்பும் நோன்பு வழிபாடுகள் ஆகியவை நான் பெற்ற ஆசிகள்.

ஐந்து ஆண்டுகளும் எல்லாத் திருப்பலி களிலும் ஆண்டவருக்கு இறைபுகழ்ச்சி செலுத்தப்பட்டது. இறைமக்களுக்காக 105 விவிலியப் பாசறைகள் நடத்தப்பட்டன. இறைவேண்டல் ஆர்வம் ஊக்கப்படுத்தப் பட்டது. செப ஏடுகள் வழங்கப்பட்டன.


ஆண்டவர் எனக்குத் தந்த கொடைகள் அனைத்தும் அவரது மாட்சிக்காகவும், அன்னையின் பெருமைக்காகவும் பயன்படுத்தப்பட்டன. நான் இசையமைத்த பாடல்கள் ஆண்டு முழுவதும் பேராலயத்தில் பாடப்பட்டன. மரியன்னையின் புகழ் பரப்பும் ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டன.

பனிமய அன்னைக்குப் பணி புரிந்ததால், ஐந்து ஆண்டுகளிலும் அன்னை பல விதங்களில் என்னைப் பெருமிதப் படுத்தினார்கள். நல்ல இதயங்களின் பாசமும், உறவும் தந்தார்கள். எத்தனையோ தனிப்பட்ட ஆசிகளைப் பெற்றுக்கொண்டேன். அனைத்திற்காகவும் அன்பு அன்னைக்கு நன்றியுடன் வாழ்வேன்.

அருள்பணி. குமார்ராஜா

*பனிமய சாட்சியம் : 104*

# இதயத்தின் ஆழத்திலிருந்து...



“கடவுளின் சொல்லொண்ணாக் கொடைக்காக அவருக்கே நன்றி உரித்தாகுக!” (2 கொரி 9:15)

நினைத்து பார்க்க முடியா வரங்களும் கொடைகளும் அரங்கேறிய இடம் புனித பனிமய அன்னை பேராலயம். இங்கு வருவேன், தங்கத் தேரை காண்பேன் என்பது என் எண்ணத்திலும் நினைத்து பார்க்காத ஒன்று. தாயின் பாதத்தில் பணிசெய்ய, தகுதியற்ற அடியேனை இறைவன் தேர்ந்துக் கொண்டார்,

அருள்பொழிவு பெற்ற முதல் ஆண்டிலேயே பேராலய உதவிப் பங்குத் தந்தையாக பொறுப்பேற்றேன். புதிய பணித்தளம், பெரிய தந்தை என்ற பயமெல்லாம் கடந்து இறைப்பணி செய்ய எனக்கு உந்துதலாக இருந்தவர் **அருள்முனைவர் குமார் ராஜா** அவர்கள். செய்யக் கூடிய பணியில் பாராட்டு, இன்னும் பணிசெய்ய ஆற்றல் தந்து என்னை வழிநடத்திய தந்தையை நன்றியோடு நினைத்து பார்க்கிறேன்.

களப்பணி சகோதரராக உடன்பிறவா தம்பியாக இருந்து பல்வேறு பணிகளில் உடன் இருந்து பணியாற்றிய **அருட்சகோதரர் ஆல்ட்ரின்** அவர்களுக்கு நன்றி. பங்கின் இருஅவை துறவற இல்ல அருள்சகோதரிகளுக்கும், துறவற தந்தையர், துறவற சகோதரர் குழுமத்திற்கும் இதயம் கனிந்த நன்றி. பங்கின் அனைத்து அன்பிய வழிகாட்டிகளுக்கும், மேய்ப்புப் பணிக்குழு உறுப்பினர்களுக்கும், பங்கு மக்களுக்கும், வெளிப்பங்கு மக்களுக்கும் நன்றி.

நமது பங்கின் ஆலயப் பணியாளர்களின் தியாகம் நிறைந்த பணிவாழ்வு என்னுடைய நம்பிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறது. ஆலயப் பணியாளர்களுக்கும், பங்கின் அனைத்துப் பணியாளர்களுக்கும், இசையால், பாடலால் இறைவனை புகழ்ந்த அனைத்து பாடகர் குழுவினருக்கும், பீடப்பூக்களுக்கும் நன்றி.

கடந்த 2023 ஜூன் மாதம் தொடங்கி இவ்வாண்டு 2024 மே மாதம் வரை தாயின் வல்லமைமிக்க பரிந்துரை என்னை காப்பாற்றியிருக்கிறது. ஜூலை 26 – ஆகஸ்ட் 05 வரை நடைபெற்ற அன்னையின் பேராலாய திருவிழாவில் இணையும் வாய்ப்புக் கிடைத்தது கண்டு மகிழ்கிறேன். இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஞாயிறு மறைக்கல்வி, விடுமுறை விவிலியப் பள்ளி வாயிலாக பெற்றுக் கொண்ட அனுபவத்திற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி.

டிசம்பர் மாத வெள்ளப்பெருக்கின் போது, கிடைத்த பணி அனுபவத்தை மறக்க முடியாது. மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட்ட அனைத்து தன்னார்வத் தொண்டர்களையும் குறிப்பாக பனிமய இளையோரையும் (Snows Youth) நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

இப்பங்கில் நான் பெற்றுக் கொண்ட பணி அனுபவம் என் எதிர்கால வாழ்வுக்கு நிச்சயம் உதவும்.

**அருள்பணி. சைமன் ஆல்டஸ்**



பனிமய சாட்சியம் : 105

# என்னை உருவாக்கிய அன்னை

இந்த களப்பணி ஆண்டில் இறைவனின் பராமரிப்பை, ஆசீரை, உருவாக்கத்தை பல விதங்களில் நான் அனுபவித்திருக்கிறேன்.

தூத்துக்குடி ஸ்டேட் பேங்க் காலனி பங்கைச் சேர்ந்த நான், "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" என்ற வியப்பில்தான் என்னுடைய களப்பணியை தொடங்கினேன். 2023 மே 15ம் தேதி களப்பணியாளராக பனிமய அன்னைப் பேராலயத்தில் பொறுப்பேற்றேன். பனிமய அன்னையின் தங்கத்தேர் பெருவிழாவின்போது பெற்ற அனுபவங்கள் என் குருத்துவ பயிற்சி வாழ்க்கைக்கு பயனுள்ளதாக இருந்தன. தங்கத்தேர் பெருவிழாவின்போது இறைவனுடைய பராமரிப்பையும் அவருடைய ஆசீர்வாதத்தையும் அன்னையின் பரிந்துரையையும் உணர்ந்தேன். தங்கத்தேர் பெருவிழா எனக்கு பல பாடங்களை கற்றுக் கொடுத்தது. அதிபர் தந்தை, துணைப் பங்குத்தந்தை ஆகியோரின் செயல்பாடுகளைப் பார்த்து இறை வேண்டலின் வல்லமை, நேர மேலாண்மை, விழாக்களை ஒருங்கிணைப்பு செய்தல், விருந்தினர்களை கவனிப்பது என்று பல செயல்பாடுகளைக் கற்றுக் கொண்டேன்.

இத்தகைய பெரும் விழாவை நடத்த நானும் உதவியாக இருந்ததையும் அதற்கு இறைவன் திருவுளம்கொண்டதையும் நினைத்து மகிழ்கிறேன். இத்தகைய பெரும் பேற்றினை அன்னை எனக்கு பெற்றுத் தந்தார்கள்.

மேலும் கடந்த 2023 டிசம்பர் மாதம் நடந்த கனமழை பேரிடரின்போது பொதுமக்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உதவிகள் செய்தது, அவர்களுக்கு மக்களோடு இணைந்து உணவு தயார் செய்தது, உதவிப் பொருட்களை பல இடங்களுக்கும் கொண்டு சென்றது போன்ற பல அறச் செயல்கள் என்னைப் பிறரன்பில் வளர உதவின.

இவ்வாறு பல வழிகளில் அன்னை என்னை உருவாக்க, இறை சித்தத்தின்படி நடக்க, இறை பராமரிப்பை உணரக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

இக்களப்பணி ஓராண்டில் பல அதிசயங்களும் ஆசீர்வாதங்களும் என் வாழ்வில் நடந்திருக்கிறது. அதில் சிறப்பாக என்னுடைய மூத்த அண்ணன் திருமணம், என்னுடைய இரட்டை சகோதரனுடைய நற்சுகம், எனது பள்ளிப் பருவத் தோழி குழந்தைச் செல்வத்திற்காக காத்திருப்போருக்கான நோன்பு வழிபாட்டில் பங்கு கொண்டு பனிமயத்தாயின் பரிந்துரையால் பெற்றுக் கொண்ட குழந்தை வரம் ஆகியவையாகும். அனைத்திற்கும் அன்னைக்கு நன்றிக் கடன்பட்டு இருக்கிறேன்.

வருகின்ற ஜூன் மாதம் இறையியல் படிக்க சென்னை பூவிருந்தவல்லி தூய நெஞ்சக் குருத்துவ கல்லூரிக்கு செல்லவிருக்கிறேன். அங்கும், வருகின்ற காலங்களிலும் இவ்வோராண்டு பயிற்சிகளும், அனுபவங்களும் நான் சிறப்புற பணியாற்ற உதவும். திவ்ய தஸ்நேவிஸ் மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அருள்சகோ. ஆல்ட்ரின்

# எங்கே செல்கிறோம்?

**நற்செய்தி நடுவம், தூத்துக்குடி.** தூத்துக்குடி பத்திநாதபுரத்திலுள்ள நற்செய்தி நடுவத்தில் ஒரு விருந்தினராகத் தங்கியிருந்து முழு நேர நற்செய்திப் பணியாளராக செயல்படப்போகிறேன். மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் என்னை "யூபிலி 2025" தயாரிப்புக் குழுவின் ஓர் உறுப்பினராக நியமித்துள்ளார்கள். அதன்படி மறைமாவட்டம், மறைவட்டம், பங்கு அளவில் குழுக்களுக்குத் தியானங்கள், பாசறைகள், கருத்தமர்வுகள் நடத்துவேன். கடந்த பிப்ரவரி மாதமே இப்பணியை நான் தொடங்கிவிட்டேன். அடுத்த ஓராண்டு இதையே முழு நேரப் பணியாகச் செய்யப்போகிறேன். கூடுதலாக, குருக்கள், துறவியர், குருமாணவர்கள், ஆசிரியர்கள் போன்ற சிறப்புக் குழுவினருக்குத் தியானங்கள், பயிற்சிப் பாசறைகள் நடத்துவேன். இந்த ஆண்டை உடல், உள்ள, ஆன்ம ஓய்வின் ஆண்டாகவும் செலவழிக்க விரும்புகிறேன். ஏற்கனவே 2006, 2015 ஆண்டுகளில் இரு முறை நற்செய்தி நடுவத்தில் தங்கிப் பணியாற்றியிருக்கிறேன். இது எனக்கு "ஹாட்ரிக்" அனுபவம்.



**உதவிப் பங்குத் தந்தை, இடிந்தகரை.** தூத்துக்குடி பனிமயத் தாயின் திருத்தலத்திலிருந்து இடிந்தகரை லூர்து அன்னை வீற்றிருக்கும் புனித பேதுரு, பவுல் பங்கின் உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றச் செல்கிறேன். ஏற்கனவே, கடந்த 2022ஆம் ஆண்டு அப்பங்கில் திருத்தொண்டராகப் பணியாற்றியிருக்கிறேன். எனவே, இடமும், மக்களும் எனக்கு அறிமுகமானவர்கள்தான். எனவே, மகிழ்வுடன் செல்கிறேன். பனிமய அன்னைப் பேராலயத்தில் பெற்றுக்கொண்ட அனைத்து அனுபவங்களும் இடிந்தகரையில் எனக்கு உதவியாக இருக்கும். பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழாவில் பங்கேற்கும் பேற்றினைப் பெற்ற நான், இடிந்தகரை லூர்து அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழாவிலும் கலந்துகொள்ளவிருப்பது இறைவன் தந்த கொடையே.



**திரு இதயக் குருத்துவக் கல்லூரி, சென்னை.** எனது இறையியல் படிப்புக்காக சென்னை, பூவிருந்தவல்லி, திரு இதயக் குருமடத்திற்குச் செல்லவிருக்கிறேன். ஏற்கனவே, இரண்டு ஆண்டுகளாக எனது மெய்யியல் பட்டப் படிப்பை நான் அங்கேதான் முடித்தேன். எனக்கு நன்கு அறிமுகமான, பிடித்தமான குருமடம். அங்குள்ள தந்தையர்களும், சகோதரர்களும் பாசத்தோடு பழகுபவர்கள். அவர்களோடு மீண்டும் இணைவதில் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஓராண்டாக பனிமய அன்னைப் பேராலயப் பங்கில் நான் பெற்ற அனுபவங்கள் எனது இறையியல் படிப்புக்கு மிகவும் உதவும் என்பது என் நம்பிக்கை.



# அன்புடன் வரவேற்கிறோம்!





**புனித பனிமய அன்னை திருத்தலப் பேராலயத்தின் அதிபர் மற்றும் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டுள்ள**

## அருள்பணி. ஸ்டார்வின்

**அவர்களை அன்புடன் வரவேற்கிறோம்.**

தூத்துக்குடி மறைமாவட்டத்தின் புகழ்பெற்ற அருள்பணியாளர்களுள் ஒருவரான தந்தை ஸ்டார்வின், வயது 56, 1995ஆம் ஆண்டு அருள்பொழிவு செய்யப்பட்டு, 29 ஆண்டுகளாக நமது மறைமாவட்டத்தில் திருப்பணியாற்றி வந்துள்ளார்கள்.

திருப்பொழிவு செய்யப்பட்டபின் நான்கு ஆண்டுகள் உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றியதைத் தொடர்ந்து, பின்வரும் பணிகளை சிறப்புடன் ஆற்றியுள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 2000-2002 | கீழ வைப்பாறு பங்குத் தந்தை | 2 ஆண்டுகள் |
| 2. | 2002-2006 | பல்நோக்கு சங்க (டிஎம்எஸ்எஸ்எஸ்) இயக்குநர் | 4 ஆண்டுகள் |
| 3. | 2006-2009 | தமிழக சேவை சங்க (டாசோஸ்) துணை இயக்குநர் | 3 ஆண்டுகள் |
| 4. | 2009-2014 | தூத்துக்குடி அந்தோனியார் கோவில் பங்குத் தந்தை | 5 ஆண்டுகள் |
| 5. | 2014-2019 | ஆறுமுகனேரி சவேரியார் கோவில் பங்குத் தந்தை | 5 ஆண்டுகள் |
| 6. | 2019-2024 | ஒருங்கிணைப்பாளர், நற்செய்தி நடுவ இயக்குநர் | 5 ஆண்டுகள் |

கடந்த 2020ஆவது ஆண்டில் குருத்துவ வெள்ளிவிழாவைக் கொண்டாடிய தந்தை ஸ்டார்வின் மறைமாவட்டத்தின் மூத்த அருள்பணியாளராக மதிக்கப்படுகிறார்கள்.

நல்ல மறையுரையாளர், சிந்தனையாளர், ஒருங்கிணைப்பாளர், தி;ட்டமிட்டுச் செயல்படுபவர், உறவின் மனிதர், நம்பிக்கைக்குரியவர், திறன்மிக்கவர், துணிவும் நியாய உணர்வும் நிறைந்தவர், உண்மைகளை உரக்கச் சொல்பவர், மதிப்பீடுகளை சமரசம் செய்யாதவர், நேர்மையாளர் என அனைவராலும் அறியப்பட்ட அருள்பணி. ஸ்டார்வின் பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் 21ஆவது பங்குத் தந்தையாக எதிர்வரும் 20.05.2024 திங்கள் மாலையில் பொறுப்பேற்கிறார்கள். தந்தை ஸ்டார்வின் அவர்களை அன்புடன் வரவேற்கிறோம். இத்திருத்தலத்தில் அன்னாரின் பணியும், வாழ்வும் பனிமயத் தாயின் அடைக்கலத்தில் இறையாசி பெற்றதாய் அமைய வாழ்த்துகிறோம்.

# அன்புடன் வரவேற்கிறோம்!







நமது பங்கின் புதிய உதவிப் பங்குத் தந்தையாகப் பணியேற்கும் **அருள்பணி. பாலன்** அவர்களை அன்புடன் வரவேற்கிறோம். கடந்த 2021ஆம் ஆண்டு அருள்பொழிவு செய்யப்பட்டபின், பெரியதாழை, ஆலந்தலை, இடிந்தகரை ஆகிய மூன்று பங்குகளில் உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றியுள்ளார்கள். இந்த ஆண்டில் அருள்தந்தையின் வாழ்வும், பணியும் பனிமயத் தாயின் ஆசி பெற்றதாக அமைய வாழ்த்துகிறோம்.

நமது பேராலயப் பங்கில் களப்பணியாளராகப் பணியாற்ற வந்திருக்கின்ற **அருள்சகோதரர் தினகரன்** அவர்களை அன்புடன் வரவேற்கிறோம். நமது மறைமாவட்டத்தின் மரபார்ந்த பெரியசாமிபுரம் பங்கின் மகனான சகோ. தினகரன், கடந்த இரண்டு ஆண்டுகளாக தனது மெய்யியல் படிப்பை புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் பயின்றார். இந்த ஆண்டில் சகோதரரின் வாழ்வும், பணியும் பனிமயத் தாயின் ஆசி பெற்றதாக அமைய வாழ்த்துகிறோம்.

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 59)

**ஜூன் - 2024**

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

551. இந்த ஆண்டுக்கான விடுமுறை விவிலியப் பள்ளி 25.04.2024 அன்று தொடங்கி 04.05.2024 வரை 10 நாள்கள் நடைபெற்றது. 190 குழந்தைகள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். நிறைவு விழா 04.05.2024 சனி மாலையில் அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது.

552. குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்கான பனிமய நோன்பு வழிபாடு (44) 12.05.2024 ஞாயிறு நடைபெற்றது. முன்னதாக இதே கருத்துக்காக 06.05.2024 திங்கள் முதல் 11.05.2024 வரை தினமும் 12.00 முதல் 03.00 வரை நோன்பு ஆராதனை நடைபெற்றது.

553. நமது பங்கின் மண்ணின் மலர்கள், அடைக்கல அன்னை அவையின் துறவியர் அருள்சகோ. சுகிர்தா, அருள்சகோ. மர்சலின் இருவரின் துறவற வெள்ளிவிழா நன்றித் திருப்பலி 11.05.2024 சனி மாலை 05.30 மணிக்கு நடைபெற்றது. தொடர்ந்து, வரவேற்பு வழங்கப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை



*வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 156. | கேய்ன் தாமஸ் | ஷரன் தாமஸ் - ரோஸ்லின் | 05.05.2024 | சிறுமலர் |
| 157. | சேவியர் ரிஜோ | ரிகிலன் - ஜாய்ஸி | 05.05.2024 | தஸ்நேவிஸ் மாதா |
| 158. | பிரைல் | விகாஷ் - மேத்லின் | 19.05.2024 | சூசையப்பர் |
| 159. | ஸோயீ ராக்ஸேன் | டயான்ஸியுஸ் - கிரேனப் | 19.05.2024 | இராயப்பர் |



## வாழ்த்துகின்றோம்

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 191. | அஜய் மதன் | ரூபர்ட் - ஏஞ்சல் மாலிக்கா | 04.05.2024 | கிறிஸ்தரசர் |
| 192. | ரோஹித் | ரூபர்ட் - ஏஞ்சல் மாலிக்கா | 04.05.2024 | கிறிஸ்தரசர் |
| 193. | சிஃபோன் | திவாகர் - சித்ரா | 05.05.2024 | செபஸ்தியார் |
| 194. | சிஃபோனா | திவாகர் - சித்ரா | 05.05.2024 | செபஸ்தியார் |
| 195. | மரிய ஆன்ட்ரிக்ஸ் | ஸ்மைலன் - ஆனந்தி | 12.05.2024 | பரிபூரண மாதா |
| 196. | இம்மானுவேல் சாவ்ரியோ | அந்தோணி ஸ்டீபன் - மஜெல்லா | 12.05.2024 | சவேரியார் |
| 197. | ஜாஃப்னி | மதன் குமார் - சகாய ஜோஷி | 12.05.2024 | பவுலடியார் |



## ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 134. | மெல்பின் - இன்பென்டா அனு | இராயப்பர் | 05.05.2024 |
| 135. | நிக்சன் - டோமா பிரிசில்லா | காவல் தூதர் | 10.05.2024 |
| 136. | பால் ஜேக்கப் - மரிய ஹெனா | சவேரியார் | 12.05.2024 |
| 137. | அருள்தாஸ் - ரொசாரி ரசிகா | மணல் மாதா | 13.05.2024 |




## இறைவனைப் போற்றுகிறோம்

## 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 46 | சிந்தியா | பிரான்சிஸ் மோத்தா | 16.04.2024 | பொம்பெய் மாதா |
| 47 | ஜான்சி பொன்சேக்கா | அருள்சாமி | 03.05.2024 | காவல்தூதர் |
| 48. | ரீத்தம்மாள் | செல்வி | 03.05.2024 | ஜூடு |
| 49. | ராணி | சத்யா பர்னாண்டோ | 08.05.2024 | பவுலடியார் |

## செபிக்கின்றோம்

## 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 199. | சகாயராஜா பர்னாந்து | சகாயராணி | 24.04.2024 | பனிமயம் |
| 200. | சுஜாதா | பிரசாத் | 05.05.2024 | செபஸ்தியார் |
| 201. | குழந்தை திரேசம்மாள் | நேவிஸ் பர்னாந்து | 06.05.2024 | லூர்து மாதா |
| 202. | ஜான்சி பொன்சேக்கா | அருள்சாமி | 08.05.2024 | காவல்தூதர் |
| 203. | ராணி | சேசையா பர்னாந்து | 09.05.2024 | பவுலடியார் |

## நடைபெறவிருப்பவை

- ★ 01.06.2024 மாதத்தின் முதல் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 07.06.2024 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.


## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 175. | 04.06.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | வெற்றி வாழ்வு வாழ்வோம் |
| 176. | 11.06.2024 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | எதிர்நோக்கின் திருப்பயணம் |
| 177. | 18.06.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | வாழ்வு என்னும் பயணம் |
| 178 | 25.06.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின்குமார் | இறைவேண்டலின் பயணம் |
| 179. | 02.07.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | உறவுகளின் திருப்பயணம் |

# எம் அன்புப் பெற்றோர் மற்றும் சகோதரி நினைவு

| 50-ஆம் ஆண்டு | 68-ஆம் ஆண்டு | 7-ஆம் ஆண்டு |
|---|---|---|
| **M. தாமஸ் மஸ்கரனாஸ்** | **T. பாத்திமா மஸ்கரனாஸ்** | **T. சம்மனஸ் அம்மாள் மஸ்கரனாஸ்** |
| 16.07.1974 | 16.11.1956 | 16.06.2017 |



*பிரிவால் துயருறும்*

**Rev. Fr. T. டெரன்ஸ் மஸ்கரனாஸ் SVD (HONG KONG)**

| மக்கள் | மருமக்கள் |
|---|---|
| T. ஜெசிந்தா மஸ்கரனாஸ் | L.R.P. ராயன் |
| T. பிரான்சிஸ் மஸ்கரனாஸ் | ஜுலியட் பிரான்ஸிஸ் |
| T. வெனிட்டாள் மஸ்கரனாஸ் | |
| T. இருதயராஜ் மஸ்கரனாஸ் | சரோ ராஜ் மஸ்கரனாஸ் |
| T. ஜோசப் மஸ்கரனாஸ் | சார்லெட் ஜோசப் மஸ்கரனாஸ் |

பேரன்கள், பேத்திகள், பூட்டன்கள், பூட்டிகள்

அன்னை இல்லம், No. 1, பெரிய கோயில் தெரு, தூத்துக்குடி.
Mobile : 95663 28215

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

"நீதியுள்ள ஆண்டவர்தம் திருமுகத்தை
நேர்மையாளர்கள் காண்பர்" (திபா 11:7)



மண்ணில்
11.03.1957

விண்ணில்
01.06.2019

## R. நிர்மலா பர்னாந்து

*வயது : 63*

கண் முன்னே நீங்கள் வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் நிழலாகும்

மிகவும் மதுரமான இயேசுவே!
வாழ்நாளெல்லாம் உமது அன்பில் மகிழ்ந்து வாழ்ந்த
நிர்மலா பர்னாந்து அவர்களின் ஆன்மா
விண்ணரசில் நித்திய பேரின்பத்தில் மகிழ்ந்து வாழ
அருள்புரியும். - ஆமென்.

**நினைவுகூரும் நாள் :**
**2024, ஜூன் மாதம் 1–ஆம் தேதி அன்று**

# நினைவு அஞ்சலி!

24ஆம் ஆண்டு நினைவு

மூன்றாம் ஆண்டு நினைவு

தோற்றம் 03.12.1952
மறைவு 27.02.2000



தோற்றம் 10.06.1956
மறைவு 21.06.2021

## அலங்காரம் பர்னாந்து

## மரிய கமலசீலி பர்னாந்து

என்றும் எங்கள் கண்களில்
கண்ணீரை காணவிரும்பாத நீங்கள்
இன்று கண்ணீரை மட்டும்
எம் கண்களுக்கு தந்துவிட்டு
இனியென்றும் நாங்கள் காணமுடியா
இடம்நோக்கி சென்றதும் ஏனோ?

இன்றும் இனியென்றும் உங்கள் நினைவுகளோடு

வாழும், வாடும் குடும்பத்தினர்

SHINY Ph : 98421 31493